# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1801 - 2013 මාර්තු මස 08 වැනි සිකුරාදා - 2013.03.08

*1801 ஆம் இலக்கம் – 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 356 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 364 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, மாச்சு மாதம் 28 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, மாச்சு மாதம் 15 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி - குருநாகல் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2013, சித்திரை மாதம் 08 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2013, மாசி 11.

**அட்டவணை**

| மாவட்டம் | உதவி அரசாங்க அதிபர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| குருநாகல் | அலவ்வ | தம்பதெனி உடுக்கஹ கிழக்கு பிரிவில் பிறப்பு மற்றும் இறப்பு அத்துடன் தம்பதெனி ஹத்பத்துவ பிரிவில் விவாகப் (பொது/கண்டிய) பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், குருநாகல் |
| குருநாகல் | மல்லாவபிற்றிய | திரஹன்கடாய கிழக்கு பிரிவில் பிறப்பு மற்றும் இறப்பு அத்துடன் விடவில்லி ஹத்பத்துவ பிரிவில் விவாகப் (பொது/ கண்டிய) பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், குருநாகல் |
| குருநாகல் | குளியாப்பிட்டிய மேற்கு | கட்டுகம்பொல ஹத்பத்துவ (குளியாப் பிட்டிய நகரம்) பிரிவில் விவாகப் (பொது/கண்டிய) பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், குருநாகல் |

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி - நுவரெலியா மாவட்டம்

*இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.*

*2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.*

*3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.*

*4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.*

*5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.*

*6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.*

*7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2013, சித்திரை மாதம் 08 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.*

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2013, மாசி 11.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *உதவி அரசாங்க அதிபர் பிரிவு* | *விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| நுவரெலியா | கொத்மலை | திஸ்பனே பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் கொத்மலை பிரிவில் விவாகப் (பொது/கண்டிய) பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், நுவரெலியா |

*3-313*

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி - காலி மாவட்டம்

*இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*1. விண்ணப்பதாரர்கள் உரிய விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.*

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2013, சித்திரை மாதம் 08 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2013, மாசி 11.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| காலி | காலி நாற்புறமும் சூழலும் | ஹிரிம்புர பகுதியில் காலி மாவட்டப் பிரிவில் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர், மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், காலி |

3-316

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

தமிழ் மொழி மூலம் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - வவுனியா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2013, சித்திரை மாதம் 08 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2013, மாசி 12.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| வவுனியா | வவுனியா | வவுனியா நகரப் பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் வைத்திய பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், வவுனியா |

3-315

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி - புத்தளம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2013, சித்திரை மாதம் 08 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2013, மாசி 15.

**அட்டவணை**

| மாவட்டம் | உதவி அரசாங்க அதிபர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| புத்தளம் | நாத்தாண்டிய | நாத்தாண்டிய பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் பிற்றிகல கோரளை தெற்கு விவாகப் (பொது) பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், புத்தளம் |

3-384

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி - அநுராதபுரம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2013, சித்திரை மாதம் 08 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2013, மாசி 15.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அநுராதபுரம் | இபலொகம | கல்லான்சிய பகுதியில் கலகம் பலாத்த பிரிவில் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், அநுராதபுரம் |

3-385

## அரச சேவை ஆணைக்குழுச் சபை

### இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவை 2-II ஆம் தரத்திற்காக வகுப்பு 3 உத்தியோகத்தர்களை பதவி உயர்த்துதல்

கல்வி அமைச்சின் கீழுள்ள கல்விக் கல்லூரிகள், ஆசிரிய கல்லூரிகள் மற்றும் ஆசிரிய மத்திய நிலையங்களில் ஆசிரிய கல்வியியலாளர் சேவையில் 2-II ஆம் தரத்தின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக கல்விச் செயலாளரினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. இவ்வறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமையத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 2013.04.02 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு "செயலாளர், கல்வி அமைச்சு, 'இசுருபாய', பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் 2-II ஆம் தரத்திற்காக வகுப்பு 3 உத்தியோகத்தர்களை பதவி உயர்த்துதல் எனக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். இலங்கை ஆசிரிய கல்வியிய லாளர் சேவையின் 3 ஆம் வகுப்பில் உள்ள கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்ய சகல விண்ணப்பதாரர்களினதும் விண்ணப்பப்படிவங்களை தமது திணைக்களப் பொறுப்பாளர் ஊடாகச் சமர்ப்பித்தல் வேண்டும். உரிய தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

**3. சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் :**

3.1 இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் II ஆம் வாசகத்தின் 12.1 மற்றும் 12.6 தொடக்கம் 12.12 வரையான வாசகங்கள் உரியதாகும்.

3.2 வதிவிட வசதிகள் வழங்கப்படும் பட்சத்தில் கல்விக் கல்லூரி எல்லைக்குள் வசித்தல் வேண்டும்.

3.3 பதவிக்காக தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் சேவையின் தேவைக்கு அமைய எந்தவொரு கல்விக் கல்லூரி, ஆசிரிய கல்லூரி அல்லது ஆசிரிய மத்திய நிலையத்தில் சேவையாற்றக் கட்டுப்பட்டு இவ்வர்த்தமானி அறிவித்தலில் முதலாம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள அரச சேவையின் பதவிக்காக நியமிப்பதற்கு உரியதான பொது நிபந்தனைகள் மீது கவனம் செலுத்தப்படுகின்றது.

**4. விண்ணப்பிப்பதற்கான நிபந்தனைகள் :**

4.1 இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 17 ஆவது வாசகத்திற்கு அமைய பட்டத்தை ஆங்கில மொழி மூலம் பெறாதிருப்பின் பதவியுயர்வுக்காக தகைமை பெற க.பொ.த. (சா.த.) பரீட்சை அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் ஆங்கில மொழி/ ஆங்கில இலக்கியத்திற்காக திறமைச்சித்தி அல்லது அதனைவிட உயரிய சான்றிதழைப் பெற்றிருப்பது அவசியமாகும். இத்தகைமைகள் அற்ற விண்ணப்பதாரிகளின் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப் படும்.

4.2 சேவைப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வினைத்திறன் தடைதாண்டலில் சித்தியடைந்திருத்தல்.

**5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :**

5.1 ஆசிரிய கல்வியியலாளர் 2-II ஆம் தரத்துக்காக-

5.1.1 இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் 3 ஆம் வகுப்பின்கீழ் உப ஆவணப்படுத்தப்பட்ட பதவியில் 7 வருடங்களைவிடக் குறையாத திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்திசெய்து சேவையை நிரந்தரப் படுத்தியிருத்தல் மற்றும்,

5.1.2 அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் கல்வி தொடர்பான முதலாம் வகுப்பில் அல்லது இரண்டாம் வகுப்பில் (உயர்) பட்டத்தைப் பெற்றிருத்தல் அல்லது கல்வி தொடர்பான உயர் பட்டத்தினைப் பெற்றிருத் தல் ; அல்லது

5.1.3 அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் உரிய பாடத்துறை தொடர்பான பட்டத்தைப் பெற்றிருத்தல் மற்றும் விசேட அல்லது திறமைச் சித்தியுடன் பட்டப்பின் கல்வி டிப்ளோமா அல்லது உரிய பாடத்துறையின் பட்டப்பின் பட்டத்தினைப் பெற்றிருத்தல் ; அல்லது

5.1.4 அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் முதலாவது அல்லது இரண்டாவது வகுப்பில் (உயர்) சித்தியுடன் பட்டம் மற்றும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா அல்லது உரிய பாடத்துறையில் கல்வி தொடர்பான பட்டப்பின் பட்டத்தினைப் பெற்றிருத்தல்.

**6. சம்பள அளவு :**

6.1 சம்பள அளவு எஸ்எல் 1-2006

**7. தேர்ந்தெடுக்கும் முறை :**

7.1 அரச சேவை ஆணைக்குழுச் சபையினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபை மூலம் அவ்வாணைக்குழுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட புள்ளி வழங்கும் ஒழுங்குமுறைகளுக்கு அமைய கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் ஒழுங்குமுறைகளுக்கு அமைய நடாத்தப்படும்.

7.2 வருடாந்தம் ஏற்படக்கூடிய வெற்றிட எண்ணிக்கை கணக்கெடுக்கப்பட்டு அவ்வொழுங்கு முறையில் தொடருக்கு அமைய பூர்த்தி செய்யப்படும்.

7.3 நேர்முகப் பரீட்சையின்போது கீழ்க்குறிப்பிடப்பட்ட ஆவணங் களின் முதற்பிரதி சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் :-

7.3.1 பிறப்புச் சான்றிதழ் (உதவி நன்கொடை பெறும் பாடசாலைக்குச் சேர்த்துக்கொள்ளும் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ள சான்றிதழ் அல்லது பௌத்திஸ்ம சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.)

7.3.2 பட்டச் சான்றிதழ் மற்றும் கல்வித் தகைமை தொடர்பான ஏனைய சான்றிதழ்கள்.

7.3.3 தொழில் தகைமை தொடர்பான சான்றிதழ்கள்

7.3.4 சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழி அறிவு தொடர்பாகப் பெற்றுள்ள க. பொ. த. (சா. த.) மற்றும் ஏனைய சான்றிதழ்கள்.

7.4 சகல வெற்றிடங்கள் அல்லது அவற்றில் குறிப்பிட்ட அளவு எண்ணிக்கையினை நிரப்ப அல்லது நிரப்பாது இருக்கும் உரிமை அரச சேவை ஆணைக்குழுச் சபைக்கு உரியதாகும்.

7.5 பதவியுயர்வு தினத்துக்கு முன்னர் ஐந்து வருடங்களுக்குள் தண்டனைக்கு உட்படாது மற்றும் சம்பளப்படி உயர்வுகளைப் பெற்று திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

7.6 நேர்முகப் பரீட்சையின்போது தேவையான ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறுவோரின் விண்ணபப்பப்படிவங்கள் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.

அரச சேவை ஆணைக்குழுச் சபையின் உத்தரவுக்கு இணங்க,

எஸ். எம். கோடாபய ஜயரட்ன,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

2013, மாசி 22.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவை 2-II ஆம் தரத்தின் வெற்றிடங்கள்**

(ஏ4 அளவிலான கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பத்தினைத் தயாரிக்கவும்.)

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) : (வண./ திரு./ திருமதி/செல்வி) :----.
(ii) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் (தமிழில்) :----.
(iii) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.
(iv) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.

2. (i) அலுவலக முகவரி (தமிழில்) :----.
(ii) அலுவலக முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.
(iii) தனிப்பட்ட முகவரி (தமிழில்) :----.
(iv) தனிப்பட்ட முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) : ----.
(v) தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் :----.

3. (i) பிறந்த திகதி :----.
(ii) 2013.04.02 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

☐☐☐☐☐☐☐☐☐☐

5. தாங்கள் அடங்கும் இன வகை :----.

6. (i) முதல் நியமனத் திகதி மற்றும் பதவி :----.
(ii) தற்போதைய பதவி மற்றும் அதற்கு நியமனம் பெற்ற திகதி : ----.
(iii) தற்போதைய சேவை இடம் :----.
(iv) ஓய்வுபெற்றிருப்பின் ஓய்வுபெற்ற திகதி :----.
(v) ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் 3 ஆம் வகுப்பிற்குரிய முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்த திகதி :----.

7. கல்வி மற்றும் தொழில்சார் தகைமை தொடர்பான விபரங்கள் :

(i) முதலாவது பட்டம் :

| பட்டத்தின் பெயர் மற்றும் வழங்கிய நிறுவனம் | ஆண்டு | வகுப்பு | விசேடம்/ திறமை/ சாதாரணம் என்பது தொடர்பாக |
|---|---|---|---|
| | | | |

(ii) பட்டப்பின் பட்டம் :

| பட்டத்தின் பெயர் மற்றும் வழங்கிய நிறுவனம் | ஆண்டு | வகுப்பு | விசேடம்/ திறமை/ சாதாரணம் என்பது தொடர்பாக |
|---|---|---|---|
| | | | |

(iii) கல்வி டிப்ளோமா :

| சான்றிதழின் பெயர் மற்றும் வழங்கிய நிறுவகம் | பாடநெறியின் காலம் | விசேடம்/ திறமை/ சாதாரணம் என்பது தொடர்பாக | பாடங்கள் தொடர்பான விபரங்கள் |
|---|---|---|---|
| | | | |

(iv) ஏனைய தொழில் தகைமைகள் (டிப்ளோமா சான்றிதழ் மற்றும் ஆசிரியர் பயிற்சி சான்றிதழ்கள் தொடர்பான விபரங்கள்) :

| சான்றிதழின் பெயர் மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்ட நிறுவகம் | பாடநெறியின் காலம் | பாடங்கள் தொடர்பான விபரங்கள் |
|---|---|---|
| | | |

(v) ஆங்கில மொழி தொடர்பான தேர்ச்சிகள் :

| க. பொ. த. (சா. த.) ஆண்டு | பெறுபேறு செல்லுபடியாகும் திகதி | விசேடம்/ திறமை/ சாதாரணம் |
|---|---|---|
| | | |

(vi)

| ஆங்கில பாடத்துக் குரியதாகப் பெற்றுள்ள ஏனைய தகைமைகள் | வழங்கிய நிறுவனமும் செல்லுபடியாகும் திகதியும் | தரம் |
|---|---|---|
| | | |

(vii) சேவை விபரங்கள் (முன்னர் வகித்த பதவி மற்றும் ஏனைய பதவிகளின் கால எல்லை, தினங்களுடன் குறிப்பிடுக.)

| நிறுவனம் | பதவி | பாடங்கள் | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|
| | | | | |

8. தற்போது தங்களுக்கெதிராக திணைக்கள மட்டத்தில் விசாரணை இடம்பெறுகின்றதா ? அல்லது வழக்கு விசாரணை செய்யப்படுகின்றதா ? ஏதேனும் குற்றச் செயலுக்காக தாங்கள் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளீரா ? (அவ்வாறாயின் விபரங்களைக் குறிப்பிடவும்.) :----.

9. இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகவல்களும் எனது அறிவுக்கு எட்டிய வகையில் உண்மையானதும், சரியானதும் எனக் குறிப்பிடுகிறேன். இதிலுள்ள ஏதேனும் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானது அல்லது போலியானது எனத் தெரியவரும் பட்சத்தில் அதற்கமைய இப்பதவியினைப் பெற்றுக்கொள்ளத் தகைமையற்றவர் எனத் தீர்மானிக்கப்படும் என்றும் பதவி உயர்வினைப் பெற்றதன் பின்னர் அதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மைக்குப் புறம்பானது அல்லது போலியானது எனத் தெரியவரும் பட்சத்தில் நட்டஈடு பெறாது பதவியில் இருந்து நீக்கப்படவும் கட்டுப்படுகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**நிறுவனப் பொறுப்பாளரின் சான்றிதழ்**

.................................................................... இன் விண்ணப்பப் படிவத்தினைச் சமர்ப்பிக்கிறேன். அவர் இத்திணைக்களத்தில் ........................................... என சேவையாற்றுவதாகவும்/சேவையாற்றி ................................. ஓய்வுபெற்றதாகவும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
தாபனப் பொறுப்பாளர்/
பொறுப்பாளருக்குப் பதிலாக
அதிகாரம் பெற்றுள்ள
உத்தியோகத்தரின் கையொப்பம்
மற்றும் பதவி முத்திரை.

நிறுவகம் :----.
திகதி :----.

**இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் 3 ஆம் தரத்தின் உத்தியோகத்தர்களை 2-II ஆம் தரத்துக்குப் பதவியுயர்த்துவதற்காகப் புள்ளி வழங்கும் முறைகள்**

புள்ளி வழங்குவதற்காக உரிமை, தகைமைகள் வெற்றிடமாகவுள்ள தினத்துக்கு முன்னர் பூர்த்திசெய்யப்பட்டிருக்க வேண்டும்.

1. **சேவை அனுபவம்** — உயர்ந்தபட்சப் புள்ளிகள் 50

இ. ஆ. க. சே. 3 தரத்தில் 7 வருடங்களை விட மேற்பட்ட மேலதிக சேவைக் காலத்துக்காக ஒரு வருடத்துக்கு 10 புள்ளிகள் வீதம் உயர்ந்தபட்சம் 5 வருடங்களுக்காக வழங்கப் படுகின்றது

2. **மேலதிக கல்வித் தகைமை** — உயர்ந்தபட்சப் புள்ளிகள் 15

இ. ஆ. க. சே. 3 இற்கு விண்ணப்பிக்கத் தேவையான கல்வித் தகைமைகளுக்கு மேலதிகமாகவுள்ள தகைமைகளுக்காக மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படுகின்றன.

2.1 பட்டம் — 05
2.2 பட்டப்பின் பட்ட டிப்ளோமா — 10
2.3 பட்டப்பின் பட்டம் — 15

3. **கலைசார் செயற்சாதனைகள்** — உயர்ந்தபட்சப் புள்ளிகள் 10

பட்டம், பட்டப்பின் பட்ட டிப்ளோமா அல்லது பட்டப்பின் பட்டம் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்துக்காக புள்ளி வழங்கப்பட மாட்டாது என்பதுடன் ஒரு வெளிப்பாடு மற்றும் ஒரு ஆராய்ச்சிக்காக மாத்திரம் புள்ளி வழங்கப்படும்.

3.1 **ஆராய்ச்சி**

3.1.1 விரிவாகத் தயாரிக்கப்பட்ட ஆராய்ச்சி அறிக்கை (இறுதி அறிக்கை) — 02
3.1.2 தொழில்துறைக்குரிய ஆராய்ச்சிகள் — 01
3.1.3 பகிரங்க ஆராய்ச்சி கலந்துரையாடல் சபைக்கு சமர்ப்பித்தல் — 02

| | |
|---|---|
| **3.2 வெளியீடுகள்** | |
| 3.2.1 பாட இணை வெளியீடுகள் (பத்திரிகை, சஞ்சிகைகள் போன்றவற்றில் பகிரங்கப் படுத்தப்பட்டவைகள்) | 03 |
| 3.2.2 பாட இணைப் புத்தகங்களை வெளியிடல் | 02 |
| **4. தகவல் தொழில்நுட்ப இயலுமைகள்** | உயர்ந்தபட்சப் புள்ளிகள் 10 |
| (அரச அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத் தினால் பெற்றுக்கொண்ட சான்றிதழுக் காக மாத்திரம் புள்ளி வழங்கப்படும்) | |
| 4.1 6 மாதங்கள் அல்லது அதனைவிட மேற்பட்ட தகவல் தொழிநுட்ப டிப்ளோமா பாடநெறிக்காக | 05 |
| 4.2 ஒரு வருடம் அல்லது ஒரு வருடத்தை விட மேற்பட்ட தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறிக்காக | 10 |
| **5. இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையில் பெற்றுக்கொண்ட சேவை மதிப்பீடுகள்** | உயர்ந்தபட்சப் புள்ளிகள் 05 |
| 5.1 தாபன விதிக்கோவையின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய உரிய மாதிரிப் படிவத்தின் மூலம் விரிவான சேவை மதிப்பீடு மற்றும் வாழ்த்துக்களுக் கான சான்றிதழ்கள் | 05 |
| **6. மொழி அறிவு** | உயர்ந்தபட்ச புள்ளிகள் 10 |
| (அரச அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத் தினால் பெற்றுக்கொண்ட சான்றிதழுக் காக மாத்திரம் புள்ளி வழங்கப்படும்) | |
| 5.1 6 மாதங்கள் அல்லது அதனைவிட மேற்பட்ட காலம் ஆங்கில மொழி டிப்ளோமாவுக்காக | 05 |
| 5.2 ஒரு வருடம் அல்லது அதனைவிட மேற்பட்ட காலம் ஆங்கில மொழி டிப்ளோமாவுக்காக | 10 |
| மொத்தப் புள்ளிகள் | 100 |

3-511

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கைக் கணக்காளர் சேவையின் தரம் III இற்கு வடக்கு கிழக்கு நிலவும் வெற்றிடங்களுக்கு மாகாணங்களில் தொழிற் தகைமைகள் மீதான திறமை அடிப்படையில் நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்தல் - 2012 (2013)

இலக்கம் 1670/33 மற்றும் 2010.09.10 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட இலங்கைக் கணக்காளர் சேவை பிரமாணக் குறிப்பின் 7.4 ஆம் பந்தியின் பிரகாரம் இலங்கைக் கணக்காளர் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த கணக்காளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதனுடன் இணைத்துள்ள மாதிரி படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2013.04.08 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர், கொழும்பு 01, பொது திறைசேரிக் கட்டிடத்தின், திறைசேரியின் பிரதிச் செயலாளர் (ஏ) இற்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பத்தினை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இலங்கைக் கணக்காளர் சேவையின் தரம் III இற்கான நேரடி ஆட்சேர்ப்பிற்கான விண்ணப்பம்" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

2. **ஆட்சேர்ப்பு முறை.**- தரம் III இல் காணப்படும் வெற்றிடங்களில் 09 இற்கு கூடாத தொகையினரை நியமிப்பதற்காக பின்வரும் தகைமைகளைக் கொண்ட உத்தியோகத்தர்களிடம் இருந்து பகிரங்க அறிவித்தல் மூலம் விண்ணப்பங்களைக் கோரி, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சை குழுவொன்றினால் நடாத்தப்படுகின்ற கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சை ஒன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் உத்தியோகத்தர்கள் தெரிவுசெய்யப்படுவர். விண்ணப்பதாரர்கள் தமிழ் மொழியில் கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுதல் முடியும்.

3. **சேவை நிபந்தனைகள்.**- அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகளுக்கும், பொது நிபந்தனைகளுக்கும், இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசின் 2010.09.10 ஆந் திகதிய 1670/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பின் மூலம் விதிக்கப்பட்டுள்ள சேவை நிபந்தனைகள் மற்றும் அதில் செய்யப் பட்டுள்ள அல்லது இதன் பின்னர் செய்யக் கூடிய நிபந்தனைகளுக்கும் கட்டுப்படும் வகையில் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்படுவர். மேலும் பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 07/2007 இன் பிரகாரம் மொழித் தேர்ச்சியினையும் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

3.1 தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நியமன தினத்திலிருந்து ஆகக் குறைந்தது பத்து வருடங்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பணியாற்றுதல் வேண்டும். அவ்வாறு செய்வதற்கு தவறும் பட்சத்தில் அவர்களது சேவை முடிவுறுத்தப்படும்.

3.2 தம்மிடம் வழங்கப்படுகின்ற கடமைக்குரிய பொறுப்புக்களை உரிய தினத்தன்று பொறுப்பேற்பதற்கு தவறும் மற்றும்/ அல்லது நியமிக்கப்படும் பதவி ஒன்றில் அல்லது பிரதேசத்தில் கடமையினைப் பொறுப்பேற்கத் தவறும் விலகும் விண்ணப்பதாரரின் நியமனம் முடிவுறுத்தப்படும்.

4. நியமனத் தினத்திலிருந்து 03 வருட காலப் பகுதியினுள் 1 ஆவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

கட்டமைப்பு மற்றும் மாதாந்த சம்பள அளவுத் திட்டம்.- 2006.04.25 ஆந் திகதிய பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 6/2006 இன் எஸ்.எல். 1-2006 சம்பள அளவுத் திட்டத்தின் பிரகாரம் மாதாந்தச் **சம்பள அளவுத் திட்டம்.**- ரூ. 22,935 - 10X645 - 8X790 - 17X1050 - ரூ. 53,555 ஆகும்.

5. **தொழிற்சார் தகைமைகள் :**

(i) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் இறுதிப் பரீட்சை

அல்லது

(ii) பொதுநலவாய நாடு ஒன்றின் பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவகம் ஒன்றின் இறுதிப் பரீட்சை

அல்லது

(iii) பொதுநலவாய நாடு ஒன்றின் பட்டயம் பெற்ற முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகம் ஒன்றின் இறுதிப் பரீட்சை

அல்லது

(iv) சான்றிதழ் பெற்ற பட்டயக் கணக்காளர் நிறுவகம் ஒன்றின் இறுதிப் பரீட்சை

அல்லது

(v) ஐக்கிய இராச்சியத்தின் சான்றிதழ் பெற்ற பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

6. **உடல்சார் தகைமைகள்**.- அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றக் கூடியவாறு அனைத்து வழிகளிலும் உடல்சார் தகைமையினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

7. **பிற தகைமைகள் :**

(i) இலங்கைப் பிரஜை ஒருவராக இருத்தல் வேண்டும்.

(ii) சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

(iii) யாதேனுமொரு சமயத்தலைவராக பணியாற்றும் எவரும் இது பற்றிய சேவைப் பிரமாணக் குறிப்பின் 7.4.3.3 இன் பிரகாரம் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமைபெற மாட்டார்.

(iv) தகைமை பெறும் திகதி.- விண்ணப்பதாரர் ஒருவர், சேவைக்கு நியமிப்பதற்குத் தேவையான தகைமையினைப் பெற்றுள்ளதாக ஏற்றுக்கொள்வதற்கு மேற்படி தகைமையினை விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று அனைத்து வழிகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். தகைமையினை உறுதிப்படுத்துவதற்காக சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

8. **வயதெல்லை**.- விண்ணப்பம் கோரும் முடிவுத் தினத்தன்று 22 வயதை விடவும் குறையவோ 35 வயதிற்கு மேற்படவோ கூடாது.

9. பின்வரும் ஆவணங்களை விண்ணப்பதாரர் ஒருவரினால் விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழின் பிரதி ஒன்று ;

(ஆ) ஆகக் கூடிய கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் பற்றிய சான்றிதழ்களின் பிரதிகள் ;

(இ) இரண்டு நற்சான்றிதழ்கள் (இதிலொன்றினை பாடசாலையின் அதிபர்/ பல்கலைக்கழக விரிவுரையாளர் அல்லது பேராசிரியர் ஒருவரிடமிருந்து பெற்றிருத்தல் வேண்டும்.)

10. திறமை அடிப்படையில் நேரடியாக ஆட்சேர்ப்பு செய்யும் போது கட்டமைப்புசார் புள்ளிகள் வழங்கப்படும் ஒழுங்குமுறை.

(அ) கல்வித் தகைமைகள் — உச்சம் 20

| | கல்வித் தகைமைகள் | புள்ளிகள் |
|---|---|---|
| (i) | சாதாரண பட்டம் | 08 |
| (ii) | விசேட பட்டம் | 09 |
| (iii) | 2 ஆம் தரத்துடனான சாதாரண பட்டம் | 09 |
| (iv) | 2 ஆம் தரத்துடனான விசேட பட்டம் | 11 |
| (v) | 1 ஆம் தரத்துடனான சாதாரண பட்டம் | 11 |
| (vi) | 1 ஆம் தரத்துடனான விசேட பட்டம் | 12 |
| (vii) | பட்டப்பின் படிப்பு டிப்ளோமா | 13 |
| (viii) | பட்டப்பின் படிப்பு டிப்ளோமா – கணக்கு அல்லது கணக்காய்வு பாடம் ஒன்றுடன் | 15 |
| (ix) | முதுமாணி அல்லது அதிலும் கூடிய பட்டமொன்று | 15 |
| (x) | முதுமாணி அல்லது அதிலும் கூடிய பட்டமொன்று – கணக்கு அல்லது கணக்காய்வு பாடம் ஒன்றுடன் | 20 |

(ஆ) தொழில்சார் தகைமைகள் — உச்சம் - 50

| | தொழில்சார் தகைமைகள் | புள்ளிகள் |
|---|---|---|
| (i) | இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி/ இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் இருந்து பெற்றுக் கொண்ட கணக்கீடு அல்லது வணிகம் தொடர்பான உயர் டிப்ளோமாதாரர் ஒருவராகக் காணப்படல் | 15 |
| (ii) | பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகத்தின் பரீட்சை II அல்லது இலங்கைப் பட்டயம் பெற்ற நிறுவகத்தின் லைசன்டியேட்/ இடைநிலைப் பரீட்சை என்பவற்றில் சித்தி. பட்டயம் பெற்ற சான்றுப்படுத்தப்பட்ட கணக்காளர்கள் அமைப்பின் உயர்தொழில் பகுதி I இல் சித்தி | 20 |
| (iii) | இலங்கைப் பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவகத்தின் பகுதி I இறுதிப் பரீட்சையில் சித்தி, பட்டயம் பெற்ற முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவகத்தின் பரீட்சை III இல் சித்தி அல்லது பட்டயம் பெற்ற சான்றுப்படுத்தப்பட்ட கணக்காளர்கள் அமைப்பின் பகுதி II உயர் தொழில் பரீட்சையில் சித்தி | 30 |
| (iv) | இலங்கைப் பட்டயம்பெற்ற கணக்காளர்கள் நிறுவகத்தின் அல்லது பட்டயம்பெற்ற சான்றுப்படுத்தப்பட்ட கணக்காளர்கள் அமைப்பு அல்லது ஏதேனும் பிற அங்கீகரிக்கப்பட்ட உயர் தொழில் தகைமைகளில் இணைந்த அங்கத்துவத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும். | 40 |

(v) இலங்கை பட்டயம்பெற்ற கணக்காளர்கள் நிறுவகத்தில் அல்லது பட்டயம்பெற்ற முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவகத்தில் அல்லது பட்டயம்பெற்ற சான்றுப் படுத்தப்பட்ட கணக்காளர்கள் அமைப்பு அல்லது ஏதேனும் பிற அங்கீகரிக்கப் பட்ட உயர் தொழில் தகைமைகளில் பளோசிப் அங்கத்துவத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும். 50

(இ) கணினி அறிவு உச்ச புள்ளிகள் 10

I. இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் வழங்கப்பட்ட கணனி அனுமதிப் பத்திரம் (Computer Driving License) 04

II. 03 மாதங்களுக்குக் குறையாத கணனி பாட நெறி ஒன்றில் சித்தியடைந்திருப்பதுடன், மூன்றாம் நிலை மற்றும் உயர் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட நிறுவகம் ஒன்றிலிருந்து சான்றிதழ் ஒன்றினைப் பெற்றிருத்தல். 05

III. வியாபார முகாமைத்துவ தேசிய நிறுவகத்தினால் வழங்கப்பட்ட டிப்ளோமா 06

IV. பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப் பட்ட கணனி டிப்ளோமா 08

V. மேலே IV இல் குறிப்பிடப்பட்டதை விடவும் உயர்வான பிற தகைமைகள் 10

(ஈ) நேர்முகப் பரீட்சைகள் குழுவிற்கு உச்சம் - 05

"நேர்முகப் பரீட்சைக்கு முகம்கொடுக்கும்போது காட்டப்படுகின்ற திறமைகளுக்கு நேர்முகப் பரீட்சைகள் குழு திருப்தியடையும் வகையில் இப்புள்ளிகள் வழங்கப்படும்."

(உ) குறித்த துறையில் சேவை அனுபவத்திற்கு வருடம் ஒன்றிற்கு புள்ளிகள் 05 வீதம் உச்சம் - 15

மொத்தம் புள்ளிகள் - 100

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப் பட்ட நேர்முகப் பரீட்சைகள் குழுவொன்றினால் பரீட்சித்து புள்ளிகள் வழங்கப்படும்.

11. அரசாங்க சேவை மற்றும் மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவரினால் தமது விண்ணபப்ப் படிவத்தின் மூலப் பிரதியினை தமது திணைக்களத் தலைவரின் ஊடாக திறைசேரியின் பிரதிச் செயலாளர் (ஏ), பொதுத் திறைசேரி, கொழும்பு 01. எனும் முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அதில் மற்றுமொரு பிரதியை விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதி தினத்திற்கு முன்னர் நேரடியாகவே அம்முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும்.

12. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) விண்ணப்பப்படிவமானது இந்த அறிவித்தலுடன் இணைத்துள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக ஏ4 அளவிலான கடதாசி ஒன்றில் விண்ணப்பதாரரினாலேயே பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பப்படிவத்தில் இலக்கம் 01 முதல் 05 வரையில் முதற் பக்கத்தில் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை விண்ணப்பதாரர் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெறும் மொழியில் நிரப்புதல் வேண்டும். எவ்வாறாயினும் விண்ணப் பத்தைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பை ஆங்கில மொழியிலும் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) குறிப்பிட வேண்டியமை கட்டாயமான தாகும்.

(இ) முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படுவதற்கு இடமுண்டு. தபாலில் இடும்போது விண்ணப்ப மொன்று காணாமற்போதல் அல்லது தாமதமாதல் தொடர்பாக முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட மாட்டாது.

(ஈ) விண்ணப்பதாரர் ஒருவரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள யாதேனுமொரு தகவல் அவர் அதனை பிழையானது என தெரிந்து கொண்டே சமர்ப்பித்துள்ளமை கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில், அல்லது யாதேனு மொரு முக்கிய விடயத்தை அவர் வேண்டுமென்றே மறைத்திருக்கும் பட்சத்தில், நியமனம் பெறுவதற்கு அவர் தகைமையற்றவராக கருதப்படுவதற்கு இடமுண்டு. அரசாங்க சேவைக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் இவ்வாறான ஒன்றினை கண்டுபிடிக்கும் பட்சத்தில் சேவையிலிருந்து வெளியேற்ற முடியும்.

13. நிலவுகின்ற வெற்றிடங்கள் அனைத்தையும் அல்லது அதில் ஒரு பகுதியினை நிரப்புவது பற்றிய இறுதித் தீர்மானம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும்.

14. தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர் ஒருவர் மூன்று வருட தகுதிகாண் காலம் முடிவடைந்ததன் பின்னர் பதவியில் நிரந்தரமாக்கப் படுவதற்கு முன்னர் பின்வரும் பாடங்களை உள்ளடக்கிய முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும் :-

(i) அரசாங்க நிதி ஒழுங்கு விதிகள் ;
(ii) சட்டம் மற்றும் முகாமைத்துவம் ;
(iii) நிருவாகம் ;
(iv) அறிக்கை எழுதுதல் மற்றும் முகாமைத்துவத்திடம் தகவல் களை சமர்ப்பித்தல்.

15. இலங்கைக் கணக்காளர் சேவைக்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினாலேயே நியமனம் வழங்கப்படும். அவ்வாறு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுவர். முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் மற்றும் உரிய சிங்களம்/தமிழ் மொழித் தேர்ச்சி பரீட்சையில் சித்தியடைந்துள்ள நிலையில் மேற்படி காலம் முடிவடைந்ததன் பின்னர் சேவையில் நிரந்தரமாக்கப்படுவர்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

பீ.பீ. ஜயசுந்தர
செயலாளர்
நிதி, திட்டமிடல் அமைச்சு,

நிதி, திட்டமிடல் அமைச்சு,
பொதுத் திறைசேரி,
கொழும்பு 01,
2013, மாச்சு 08.

இலங்கைக் கணக்காளர் சேவையின் தரம் III இற்கு வடக்கு கிழக்கு நிலவும் வெற்றிடங்களுக்கு மாகாணங்களில் தொழிற் தகைமைகள் மீது திறமை அடிப்படையில் நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்தல் - 2012 (2013)

இலக்கம் : [ ]

(அலுவலக பயன்பாட்டிற்காக)

நேர்முகப் பரீட்சைக்கு தோற்றும் மொழி : [ ]
தமிழ் - 1

1\. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : Mr./Mrs./Miss. :----.

உ+ம் : Mr. SILVA, A.B.

1.2 முழுப் பெயர் (தமிழில்) :----.

1.3 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2\. 2.1 நிரந்தர முகவரி :----.

2.2 அலுவலக முகவரி :----.

(அரசாங்க சேவை/மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் அவரது அலுவலக முகவரியை எழுதுதல் வேண்டும். முகவரியில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்படும் பட்சத்தில், அதுபற்றி உடனடியாக அறிவித்தல் வேண்டும்.)

3\. 3.1 பிறந்த திகதி :----.

3.2 2013. 04.08 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----

விண்ணப்பம் கோரும் முடிவுத்தினத்தன்று வயது :

4\. பால் :

| ஆண் | பெண் |
|---|---|

5\. விவாகமானவரா ? விவாகமாகாதவரா ? என்பது பற்றி :

| விவாகமானவரா | விவாகமாகாதவரா |
|---|---|

6\. மொழித் தேர்ச்சி தொடர்பாக சித்தியடைந்துள்ள உச்ச அளவிலான பரீட்சை :

| (i) சிங்களம் | (ii) தமிழ் | (iii) ஆங்கிலம் |
|---|---|---|
| (1)<br>(2)<br>(3) | | |

7\. **கல்வி, தொழில்சார் மற்றும் தொழில்நுட்ப தகைமை.**—(பெற்றுக் கொண்டுள்ள உயர் பட்டம், திறமை சித்திகள், தொழில்சார் மற்றும் தொழில்நுட்ப தகைமைகள் பற்றிய விபரம், அவற்றினைப் பெற்றுக் கொண்ட திகதி, பட்டத்தில் சிறப்புத் தரம் பெற்றிருப்பின் அது பற்றிய விபரம், தோற்றிய பாடங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பெயர்களைக் குறிப்பிடவும்.) : ..................
.....................................................................
.....................................................................
.....................................................................

8\. தற்போது புரியும் தொழில் மற்றும் அதற்கு முன்னர் வகித்த சகல பதவிகளும் :- தொழிலில் இணைந்த திகதி, அதிலிருந்து விலகிய திகதி, இறுதியாக பெற்ற வருடாந்த சம்பளம் மற்றும் தொழிலை முடிவுறுத்தியமைக்கான காரணம் என்பவற்றினைக் குறிப்பிடவும்.

| பதவி | இருந்து | வரையில் | வருடாந்தச் சம்பளம் (ரூ.) | சேவையினை முடிவுறுத் தியமைக்கான காரணம் |
|---|---|---|---|---|
| (1)<br>(2)<br>(3)<br>(4)<br>(5) | | | | |

9\. நீங்கள் ஏதேனுமொரு குற்றவியல் குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா?

அவ்வாறாயின் திகதி, வழக்கு இலக்கம் என்பவற்றுடன் முழு விபரத்தையும் தரவும் :----.

10\. வேறு ஏதேனும் தகவல்கள் இருப்பின் குறிப்பிடவும் :----.

11\. நற்சான்றிதழைப் பெற்றுக் கொள்ளும் நபர்கள் தவிர்ந்த உங்களைப் பற்றிய தகவல் அறிந்த நன்கு விசாரிக்கக் கூடிய இரண்டு நபர்களுடைய பெயர் மற்றும் முகவரி என்பவற்றினை குறிப்பிடவும்.-

(1) ----.
(2) ----.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையிலும் மற்றும் எனது நம்பிக்கையின் பிரகாரமும் உண்மையானவை என இத்தால் உறுதிமொழிகிறேன். இதில் காணப்படும் தகவல்களில் ஏதும் பொய்யானவை அல்லது பிழையானவை என கண்டுபிடிக்கப் படும் பட்சத்தில் நான் தகுதியற்றவனாவதற்கும், எனக்கு எதுவித நஷ்டஈடும் வழங்காது என்னை சேவையில் இருந்து அகற்றுவதற்கும் உட்படுவதனை நான் அறிந்து வைத்துள்ளேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

*விண்ணப்பதாரர் அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் பட்சத்தில் அவர் பற்றிய திணைக்களத் தலைவரின் சிபாரிசு*

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ............................................ அவர்கள் .................... ஆந் திகதி முதல் ............................................ அலுவலகத்தில் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவராக/ மாகாண அரசாங்க உத்தியோகத்தர் ஒருவராக சேவையாற்றுகிறார் எனவும், அவரது வேலை மற்றும் நடத்தை என்பன திருப்திகரமானதாக அமைந்துள்ளன எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்,
பதவி முத்திரையும்.

திகதி :----.

3-422

---

## திருத்தம்

### இலங்கைக் கணக்காளர் சேவையின் தரம் III இற்கு வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பதவிகளை நிரப்புவதற்கான விசேட வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சை - 2012 (2013)

2013, பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதிய 1798 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பகுதி I : தொகுதி (IIஅ) இன்கீழ் வெளியான இலங்கைக் கணக்காளர் சேவை தரம் III இல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கான விசேட மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 2012 (2013) இன்கீழ் வெளியான அறிவித்தல் -

1. பரீட்சையின் திகதி கீழ்க்குறிப்பிடப்பட்ட ''பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2013, ஏப்பிறல் மாதம் கொழும்பில் மற்றும் யாழ்ப்பாணத்தில் பரீட்சை நடத்தப்படும்'' எனும் வாசகம் ''பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2013, மாச்சு/ஏப்பிறல் மாதங்களில் கொழும்பிலும் மற்றும் யாழ்ப்பாணத்திலும் பரீட்சை நடாத்தப்படும்'' என திருத்தம் செய்யப்படல் வேண்டும்.

3-421/1

---

## திருத்தம்

### இலங்கைக் கணக்காளர் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கான விசேட திறந்த போட்டிப் பரீட்சை - 2012

2013, ஏப்பிறல் மாதம் 20 ஆந் திகதிய 1755 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பகுதி I : தொகுதி (IIஅ) இன்கீழ் வெளியான இலங்கைக் கணக்காளர் சேவையின் தரம் III இல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவும் வெற்றிடங்களுக்கான விசேட திறந்த போட்டிப் பரீட்சை 2012 இன்கீழ் வெளியான அறிவித்தல் :-

1. 3 ஆம் பிரிவின் சேவை நிபந்தனைகளின்கீழ் 3.1 இல் குறிப்பிட்ட ''இப்பரீட்சையின் மூலம் நிரப்புவதற்கு எதிர்பார்க்கின்ற வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவும் வெற்றிடங்களின் தொகை 63'' என்பது ''இப்பரீட்சையின் மூலம் நிரப்புவதற்கு எதிர்பார்க்கும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை 32'' என திருத்தம் செய்யப்படல் வேண்டும்.

3-421/2

---

### அரச கரும மொழித் தேர்ச்சி எழுத்துப் பரீட்சை - 2013 (ஏப்பிறல்/மே)

சிங்களம்/தமிழ் - மட்டம் I, II, III
(இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் - அரச கரும மொழிகள் திணைக்களம்

பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 03/2007 மற்றும் 07/2007 அமைய அரச கரும மொழிகள் தேர்ச்சிப் பரீட்சைக்கு அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 07/2007 சுற்றறிக்கைப்படி 5 வருடங்களுக்குள் அரச கரும மொழித் தேர்ச்சியைப் பூரணப்படுத்தவேண்டிய அர்த்த அரசாங்க (Semi Government) சேவையிலுள்ள அலுவலர்களும் ஆசிரியர்களும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம். பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

2. இப்பரீட்சை எழுத்து மற்றும் வாய்மொழி என இரு பகுதிகளைக் கொண்டது. எழுத்துப் பரீட்சை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுவதோடு அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் வாய்மொழிப் பரீட்சை நடாத்தப்படும். அதற்கு இவ்விண்ணப்பப் பத்திரத்திலுள்ள தகவல்கள் பயன்படுத்தப்படும். (இப்பரீட்சையின் விடைத்தாள்கள் மீளப் பரீட்சிக்கப்பட மாட்டாது.)

| | பரீட்சை | மொழி | மட்டம் |
|---|---|---|---|
| 1. | அரச கரும மொழித் தேர்ச்சி எழுத்துப் பரீட்சை | சிங்களம்/தமிழ் | மட்டம் III (கீழ் மட்டம்) |
| 2. | அரச கரும மொழித் தேர்ச்சி எழுத்துப் பரீட்சை | சிங்களம்/தமிழ் | மட்டம் II (இடைநிலை மட்டம்) |
| 3. | அரச கரும மொழித் தேர்ச்சி எழுத்துப் பரீட்சை | சிங்களம்/தமிழ் | மட்டம் I (உயர் மட்டம்) |

* **குறிப்பு**.- தங்கள் சேவைக்குரிய மட்டத்தை மேற்குறித்த சுற்றறிக்கையின்படி உறுதிப்படுத்தி அம்மட்டப் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

விண்ணப்பதாரியொருவர் ஒரே நேரத்தில் ஒரு மொழித் தேர்ச்சி மட்டத்திற்கே விண்ணப்பிக்கலாம்.

உரிய மொழித் தேர்ச்சி மட்டங்களுக்காக தோற்றவேண்டிய வினாப்பத்திர எண்ணிக்கை மற்றும் காலம் தொடர்பான தகவல்கள் 1 ஆம் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன.

3. இந்த எழுத்துப் பரீட்சைகளுக்குரிய பாடப்பரப்பு, பரீட்சை படிமுறை மாதிரி விண்ணப்பப்படிவம் மற்றும் உரிய விபரங்களை அரச கரும மொழிகள் திணைக்களத்தின் www.languagesdept.gov.lk இணையத்தளத்தினூடாகப் பெற்றுக்கொள்ளலாம். அதேபோல் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகள் உரிய பரீட்சார்த்திகளுக்கு அனுப்பி வைக்கப்படாததுடன், அப்பெறுபேறுகளும் மேற்படி இணையத் தளத்தினூடாக வெளியிடப்படும். (பரீட்சைச் சுட்டெண்ணைக் கொண்டு மாத்திரமே பெறுபேறுகளைத் தேடிப்பெறலாம் என்பதால் தமது பரீட்சைச் சுட்டெண்ணைக் குறித்து வைத்திருப்பது மிகவும் முக்கியமாகும்.)

4. எழுத்துப் பரீட்சைக்குத் தீவின் அவ்வம் மாகாணங்களில் பரீட்சை மத்திய நிலையங்கள் நிறுவப்படும் நகரங்கள் மற்றும் நகர இலக்கங்கள் இணைப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளன. ஏதேனும் நகரமொன்றில் போதிய எண்ணிக்கையில் விண்ணப்பதாரிகள் இல்லாவிடின் அம்மத்திய நிலையம் இரத்துச் செய்யப்பட்டு, விண்ணப்பதாரியின் இரண்டாவது/மூன்றாவது விருப்பத் தேர்விலுள்ள பரீட்சை மத்திய நிலையத்திற்கு தொடர்புறுத்தப்படும். எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றும் நகரத்திற்குரிய மாவட்டம் வாய்மொழிப் பரீட்சைக்கும் பயன்படுத்தப் படுவதுடன், பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பிக்கும் நகரம்/நகரங்கள் பின்னர் மாற்றப்பட மாட்டாது.

5. உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய மற்றும் வழங்கியுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் பத்திரத்தினை திணைக்களத் தலைவரின் பரிந்துறை மற்றும் பதவி முத்திரையுடன் 2013, ஏப்பிறல் 08 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு ''பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் பிரிவு, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை'' எனும் விலாசத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் அனுப்பி வைக்கப்படும் உறையின் இடதுபுற மேல் மூலையில் ''அரச கரும மொழித் தேர்ச்சிப் பரீட்சை - 2013 ஏப்பிறல்/மே'' எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

6. விண்ணப்பப்படிவத்தை இலக்கம் 1 முதல் 6 வரை முதலாம் பக்கத்திலும் மிகுதிப் பகுதி இரண்டாம் பக்கத்திலும் வருமாறு தயாரிக்க வேண்டியதுடன் விண்ணப்பப்படிவத்தை தமது கையெழுத்திலேயே பூரணப்படுத்த வேண்டும்.

7. மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படாத அல்லது அறிவுறுத்தல்களுக்கு மாறான அல்லது பூர்த்திசெய்யப்படாத அல்லது இறுதித் திகதிக்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் எழுதப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை உங்கள் வசம் வைத்திருத்தல் உங்களுக்குப் பயனுள்ளதாக அமையும். விண்ணப்பிக்கும் மொழியும் தேர்ச்சி மட்டமும் பின்னர் மாற்றப்பட மாட்டாது.

8. ஒரு தேர்ச்சி மட்டத்திற்கு முதற்தடவை விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரியிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது. அவ்வாறல்லாத விண்ணப்பதாரிகளிடமிருந்து 300 ரூபா பரீட்சைக் கட்டணமாக அறவிடப்படும். அப்பரீட்சைக் கட்டணத்தை நாட்டிலுள்ள ஏதேனும் ஒரு மாவட்டச் செயலாளர் அலுவலகத்திற்கு அல்லது பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரிலேயே பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்தில் உரிய இடத்தில் கழறாதவாறு நன்கு ஒட்டுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணத்தை வருமானத் தலைப்பு ''20.03.99.00 - வேறு வருமானங்கள்'' என்பதில் வரவுவைத்தல் வேண்டும்.

9. விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டதும் அது குறித்து பத்திரிகை அறிவித்தல் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கழிந்த பின்னரும் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாவிட்டால் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு அது குறித்து இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். உங்கள் வசமுள்ள பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் உறுதிப்படுத்திய பிரதியொன்றையும் விண்ணப்பப்படிவத்தைப் பதிவுத்தபால் செய்த பற்றுச்சீட்டின் பிரதியொன்றையும் கொழும்பு அல்லாத வெளிப் பிரதேசமாயின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு உங்களின் விண்ணப்பப்படிவத்தை இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்புதல் மிகவும் பயனுள்ளதாக அமையும்.

10. விண்ணப்பதாரி ஒருவருக்கு அனுமதிச்சீட்டு வழங்கப்படுவதை அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகுதியைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான சான்றாகக் கருதலாகாது.

11. இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளின்போது விண்ணப்பதாரர் தமது அடையாளத்தினை நிரூபிப்பதற்கு தேசிய அடையாள அட்டையோ அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டோ மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். ஏதேனும் காரணத்தினால் தமது அடையாளத்தினை நிரூபிக்காது பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்தியின் பெறுபேறுகள், அது தொடர்பான விசாரணையின் பின்னர் தமது அடையாளத்தினை நிரூபித்தால் மாத்திரமே வெளியிடப்படும்.

12. பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது விண்ணப்பதாரியின் பதவி மற்றும் அவர் பணிபுரியும் இடம் பரீட்சையின் சகல நடவடிக்கைகளுக்கும் ஏற்புடையதால் விண்ணப்பப்படிவத்தை அனுப்பியதன் பின்னர் ஏற்படும் மாற்றங்கள் எதுவும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

13. இவ்வெழுத்துப் பரீட்சை தொடர்பாக மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் குறித்து இறுதி முடிவு உரியபடி பரீட்சை ஆணையாளர் நாயகம் மற்றும்/அல்லது அரச கரும மொழிகள் ஆணையாளருக்கு உரியது.

14. எழுத்துப் பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்ட சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படல் வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்பட அவருக்கு நேரிடும்.

15. **மேலதிக விபரங்களுக்கு**.- அரச கரும மொழிகள் திணைக்களத்தின் தொலைபேசி இல. 011-2889506, 011-2888934-220 ஐத் தொடர்புகொள்ளுங்கள். அனுமதிச்சீட்டுப் பிரச்சினைகளுக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் 011-2785230 அல்லது 011-2177075 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளல் வேண்டும்.

ஜே. டீ. சி. ஜயசிங்க,
அரச கரும மொழிகள் ஆணையாளர்.

அரச கரும மொழிகள் திணைக்களம்,
''பாஷா மந்திரய'',
இல. 341/7, கோட்டை வீதி,
இராஜகிரிய,
22.02.2013.

| அலுவலக உபயோகத்திற்கு |
|---|

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரச கரும மொழித் தேர்ச்சி எழுத்துப் பரீட்சை - 2013 (ஏப்பிறல்/மே)**

சிங்களம்/தமிழ் - மட்டம் I, II, III
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் மற்றும் அரச கரும மொழிகள் திணைக்களம்

பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் நகரமும் நகர இலக்கமும் (விருப்பத்தின் அடிப்படையில்)
(அறிவித்தலின் இணைப்பு 1 இன் பிரகாரம்)

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |

விண்ணப்பிக்கும் மொழி :

சிங்களம் - 2
தமிழ் - 3

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)

விண்ணப்பிக்கும் மட்டம் :

மட்டம் I (உயர் நிலை) - 1
மட்டம் II (இடை நிலை) - 2
மட்டம் III (கீழ் நிலை) - 3

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)

1. விண்ணப்பதாரியின் பெயர் (முதலெழுத்தை இறுதியில் குறித்து ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.
உதாரணம் : GAMINI. H. W.

2. முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.

3. முகவரி :

(i) அரச கடிதம் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.
(அனுமதிப்பத்திரம், பெறுபேறுகள் மற்றும் சான்றிதழ்கள் இம்முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்கப்படும்)

(ii) நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :
----.

4. மாவட்டம் :

(i) சேவை நிலையம் உள்ளடங்கும் மாவட்டம் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.

(ii) சேவை நிலையம் உள்ளடங்கும் மாவட்டத்தின் இலக்கம் :
(அறிவித்தலின் இணைப்பு 1 இன் பிரகாரம்)

5. பால் :
ஆண் - 0
பெண் - 1

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

6. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

7. தொலைபேசி இலக்கம் :

8. பிறந்த திகதி :

வருடம் : மாதம் : திகதி :

9. தங்களது பதவி :

(i) முழுமையான பதவி/சேவைப் பெயரை எழுதவும் :----.

(ii) பதவி உள்ளடங்கும் சேவை :
பொது மக்கள் சேவை - 1
மாகாண அரச சேவை - 2
பகுதி அரசுசார் - 3
ஏனைய - 4

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

10. இதற்கு முன்னர் நடாத்தப்பட்ட மொழித் தேர்ச்சி பரீட்சைகளுக்கு இம்மட்டத்தில் தோற்றியுள்ளீர்களா ? ஆம்/ இல்லை. தோற்றியிருந்தால்-

பரீட்சை இலக்கம் :----.
பரீட்சைத் திகதி :----.

11. பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்கள் :

(i) பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திய அலுவலகம் :----.
(ii) பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி :----.

| வர்த்தமானி அறிவித்தலின் 8 ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியிருந்தால் அப்பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும். பற்றுச்சீட்டின் பிரதியொன்றை வைத்திருப்பது அத்தியாவசியமாகும். |
|---|

மேற்குறித்த விபரங்கள் உண்மையானதென்பதையும், இம்மொழி தொடர்பான வேறு மட்டமொன்றிற்கு விண்ணப்பிக்கவில்லையென்பதையும், பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் மற்றும்/ அல்லது அரச கரும மொழிகள் ஆணையாளரால் எடுக்கப்படும் முடிவை இறுதி முடிவாக ஏற்றுக்கொள்வேன் என்பதையும், பரீட்சை சட்டதிட்டங்களுக்கு கட்டுப்படுவேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கையொப்பம் :----. (நிறுவனத் தலைவரின் முன்னால் கையொப்பமிடவும்.)
பெயர் :----.
திகதி :----.

**நிறுவனத் தலைவரின் உறுதிப்படுத்தல்**

மேற்குறித்த விண்ணப்பதாரர் எனது அலுவலகத்தில் சேவை புரிகிறார் என்பதையும், விண்ணப்பப்படிவத்தின் இலக்கம் 1-11 பந்திகளில்

குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை என்பதையும் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சிட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளது என்பதையும், அவரின் கையொப்பம் ................................. ஆந் திகதி என் முன்னால் இடப்பட்டது என்பதையும் உறுதிப்படுத்துகிறேன்.

கையொப்பம் :----.
பெயர் :----.
பதவி :----.
பதவி முத்திரை :----.
திகதி :----.

இணைப்பு 01

**பரீட்சை நிலையம் அமைந்துள்ள மாவட்டம்/நகரம் மற்றும் மாவட்ட இலக்கம்/நகர இலக்கம்**

| *மாகாணம்* | *மாவட்டம்/நகரம்* | *மாவட்ட இலக்கம்/ நகர இலக்கம்* |
|---|---|---|
| மேல் மாகாணம் | கொழும்பு | 01 |
| | கம்பஹா | 02 |
| | களுத்துறை | 03 |
| வடமேல் மாகாணம் | குருநாகல் | 04 |
| | புத்தளம் (சிலாபம்) | 05 |
| தென் மாகாணம் | காலி | 06 |
| | மாத்தறை | 07 |
| | அம்பாந்தோட்டை (தங்கல்லை) | 08 |
| சப்பிரகமுவ மாகாணம் | இரத்தினபுரி | 09 |
| | கேகாலை | 10 |
| ஊவா மாகாணம் | பதுளை | 11 |
| | மொனராகலை | 12 |
| மத்திய மாகாணம் | கண்டி | 13 |
| | மாத்தளை | 14 |
| | நுவரெலியா | 15 |
| வடமத்திய மாகாணம் | அனுராதபுரம் | 16 |
| | பொலன்னறுவை | 17 |
| வட மாகாணம் | யாழ்ப்பாணம் | 18 |
| | வவுனியா | 19 |
| | முல்லைத்தீவு | 20 |
| | கிளிநொச்சி | 21 |
| | மன்னார் | 22 |
| கிழக்கு மாகாணம் | திருகோணமலை | 23 |
| | மட்டக்களப்பு | 24 |
| | அம்பாறை | 25 |

**பரீட்சைக்கு நியமிக்கப்பட்டுள்ள வினாப்பத்திரம் மற்றும் காலம் தொடர்பான விபரங்கள்**

| *மொழி மூலம்* | *மட்டம்* | *வினாப் பத்திரங்களின் எண்ணிக்கை* | *காலம்* | *பரீட்சையில் சித்தியடைவதற்கு பெறவேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள்* | |
|---|---|---|---|---|---|
| | | | | எழுத்து | வாய் மொழி |
| சிங்களம் | மட்டம் iii | 1 வினாப் பத்திரம் | 2 மணித்தியாலம் | 16/40 | 24/60 |
| சிங்களம் | மட்டம் ii | 1 வினாப் பத்திரம் | 3 மணித்தியாலம் | 28/70 | 12/30 |
| | | 2 வினாப் பத்திரம் | 3 மணித்தியாலம் | | |
| சிங்களம் | மட்டம் i | 1 வினாப் பத்திரம் | 3 மணித்தியாலம் | 28/70 | 12/30 |
| | | 2 வினாப் பத்திரம் | 3 மணித்தியாலம் | | |
| தமிழ் | மட்டம் iii | 1 வினாப் பத்திரம் | 2 மணித்தியாலம் | 16/40 | 24/60 |
| தமிழ் | மட்டம் ii | 1 வினாப் பத்திரம் | 3 மணித்தியாலம் | 28/70 | 12/30 |
| | | 2 வினாப் பத்திரம் | 3 மணித்தியாலம் | | |
| சிங்களம் | மட்டம் i | 1 வினாப் பத்திரம் | 3 மணித்தியாலம் | 28/70 | 12/30 |
| | | 2 வினாப் பத்திரம் | 3 மணித்தியாலம் | | |

3-529

திருத்தம்

**பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு**

*2013, மாச்சு மாதம் 01 ஆந் திகதிய (வெள்ளிக்கிழமை) 1800 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி I : தொகுதி (IIஅ) இல் பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் என்ற பகுதியின்கீழ் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் திருத்தம்*

மேற்படி பரீட்சைக்காக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 15.03.2013 ஆந் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

பீ. பி. அபேகோன்,
செயலாளர்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7.

3-794

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.